RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1981

# தண்டலையார் சதகத்தில் தனிமனித வாழ்வியல் அறங்கள்

**நா. ஹேமமாலினி [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை-622001, தமிழ்நாடு, இந்தியா

# Ethics of Personal Life in 'Thandalaiyar Sathakam'

**N. Hemamalini [a, *]**

[a] Research Department of Tamil, H.H. The Rajah's College (Autonomous), Pudukkottai-622 001 Tamil Nadu, India

* Corresponding Author:
hemamaliniraja1984@gmail.com

Received: 01-09-2022
Revised: 18-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The literature that appears in each period provides various life ideas to the people of that period. The law books summarize the perfect principles required for a human life driven by the mind, language, and truths. These jurisprudence books speak of the idea that all the people living in the world should live happy lives. Most of the Sathakams (A Miniature genre of literature consisting of a hundred hymns) are moral pieces of literature that deal with ethical ideas. The Sathakam literature spelled out the different kinds of virtues for man to live. The virtues which may be found in the Sathakam literature, are 1. the ethics of individual life, 2. Family life ethics, and 3. Social life ethics can be divided into three categories. Among them, this article deals with the ethics of individual life contained in the Thandalaiyar Satakam.

**Keywords:** Literature, Language, Sathak Literature, Thandaliyar Sathak, Human Life, Virtues

## முன்னுரை

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தோன்றுகின்ற இலக்கியங்கள் அக்கால மக்களுக்குப் பல்வேறு வாழ்வியல் கருத்துக்களை வழங்குகின்றன. மனம், மொழி, மெய்களால் இயங்கும் மனித வாழ்வுக்கு வேண்டிய செம்மையான நெறிகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன நீதி நூல்கள். இந்நீதி நூல்கள், உலகில் வாழும் எல்லா மக்களும் இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்ற கருத்தினையே எடுத்துரைக்கின்றது. பெரும்பாலான சதகங்கள் அறக்கருத்துக்களை எடுத்துரைக்கும் அற இலக்கியங்களாகத் திகழ்கின்றன. மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு பல்வேறு விதமான அறங்களை சதக இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சதக இலக்கியங்களில் இடம்பெறக்கூடிய அறங்களை, 1. தனிமனித வாழ்வியல் அறங்கள், 2. குடும்ப வாழ்வியல் அறங்கள், 3. சமுதாய வாழ்வியல் அறங்கள் என்று மூன்று வகைகளாகப் பகுக்கலாம். அவற்றில் தண்டலையார் சதகத்தில் இடம் பெற்றுள்ள தனிமனித வாழ்வியல் அறங்களைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## தனிமனித வாழ்வியல் அறங்கள்

வாழ்தல் வேண்டும் என்பதே மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரின் விழைவாகும். வாழ்க்கை என்பது ஒருகலை. அதை அழகுப்படுத்துவதும் அழிவுப்படுத்துவதும் அவரவர் கைகளில் தான் உள்ளது.

மனிதன் பிறரோடு தொடர்பு கொள்ளும்பொழுது உண்டாகும் உணர்ச்சி வெளிப்பாடுகளில் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும், போக்குவதற்கும் அனுபவமிக்க சான்றோர்கள் வாழ்வியல் நெறிகளை வகுத்தளித்துள்ளனர். சமுதாயம் சீர்பெற தனிமனித ஒழுக்கம் இன்றியமையாத ஒன்றாகும். தனிமனிதன் சீருடன் வாழ்ந்தால் மட்டுமே சமுதாயம் உயர்வடையும், சதக இலக்கியங்கள் மக்கள் செம்மையான வாழ்க்கையினை நடத்துவதற்கும், வாழ்வாங்கு வாழ்வதற்கும் நீதிநெறிகளை வழங்கியுள்ளன.

மனிதனர்கள் பலர் ஒன்றாகக் கூடி ஒரு சமுதாயமாக வாழத்தலைப்பட்ட காலம் முதல் மக்கள் தங்கள் நலனுக்கும், நல்வாழ்விற்கும் ஏற்றவையெனச் சில கொள்கைகளையும், நெறிமுறைகளையும் வகுத்துக் கொண்டுள்ளனர்.

தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் நெருங்கிய உறவு இருப்பதனால் தனிமனிதனின் ஒழுக்கக்கேடு சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். தனிமனிதன் நல்லவனாக வாழ்கின்றபோது சமுதாயம் பண்பட்டதாக விளங்கும். உயரிய சமுதாயம் அமையத் தனிமனித ஒழுக்கம் அடிப்படையானதாகும்.

"மனிதர் தொகுப்பாக இருப்பினும் அவரவர் அளவில் தனிமனிதரே. தனிமனித வாழ்வில் ஒழுங்கும் அறமும் இன்றியமையாதன. தனிமனிதன் நன்றாக வாழ்ந்தால் தான் நாடும் உலகமும் உயர்வடையும்" என்ற கருத்திற்கேற்ப சதக இலக்கியங்கள் வாழ்வியல் அறங்களை அமைத்து தனிமனிதன் நன்றாக வாழ வழிகாட்டுகின்றன (Chandrasekaran, 2002).

தனிமனித வாழ்வியல் அறங்களில் தனிமனிதன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய அறங்கள் பற்றிய செய்திகள் தண்டலையார் சதகத்தில் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

## தனிமனிதன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய அறங்கள்

தனிமனிதனானவன் தன்னுடைய வாழ்வில் சில ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ வேண்டும். தண்டலையார் சதக இலக்கியத்தில் தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியலறங்களாக, அறம் செய்தல், ஈகை, காலம் அறிந்து உதவி செய்தல், ஆதரவற்றவர்களுக்கு உதவுதல், பிறருக்கு நன்மை செய்தல், அன்னதானம் செய்தல், நன்றி மறவாமை, இனிய சொற்களைப் பேசுதல், நட்பு, நட்பின் சிறப்பு, பெரியோருடன் நட்புக் கொள்ளல், அடக்கத்துடன் வாழ்தல், ஒழுக்கத்துடன் வாழ்தல், ஊரோடு ஒத்து வாழ்தல், பொறுமையுடன் வாழ்தல், ஆகியன இடம் பெற்றுள்ளன.

## அறம் செய்தல்

மனித இனத்தின் நலத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் மனித சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே அறமாகும். அறம் செய்தல் என்பது பெரும்பாலும் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும் என்ற நற்செயல்களையே குறிக்கின்றது. அறம் செய்வதன் மூலம் பிறருக்கும் தனக்கும் இன்பமே விளையும்.

வாழ்வு நிலையில்லாதது - மனிதனுக்கு இறப்பு எப்போது வேண்டுமானாலும் வரும். நேற்று இருந்தவர்கள் இன்று இருப்பது உறுதியில்லை. அதனால் மனத்தில் நல்ல எண்ணம் உண்டானபோதே தங்களிடம் இருக்கின்ற பொருட் செல்வத்தை ஆதரவற்றவர்களுக்கு வழங்கி அவர்களைக் காக்கும் உயரிய அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை,

"நேற்றுள்ளா ரின்றிருக்கை நிச்சயமோ

வாதலினா னினைந்த போதே

ஊற்றுள்ள பொருளுதவி யன்றோ

வைப்பதறி வுடைமை யன்றோ

கூற்றுள்ள மலைவருந் தண்டலையா

ரேசொன்னேன் குடபால் வீசும்

காற்றுள்ள போதெவருந் தூற்றிக் கொள்ள

வதுநல்ல கருமந் தானே"

என்று தண்டலையார் சதக ஆசிரியர் மொழிந்துள்ளார் (Gowmarishwari, 2009).

மனிதர்களின் ஆயுள்காலம் மிகக் குறைவானது. எனவே, வாழ்கின்ற காலத்தில் நிறைய அறங்களைச் செய்ய வேண்டும். அதனை விடுத்து எமதூதர்கள் உயிரினைக் கவர வரும்போது புலம்புவதனால் எந்தப் பயனும் இல்லை என்பதனை தண்டலையார் சதகம் (பா.எ., 46) எடுத்துரைக்கின்றது. இக்கருத்து

"வீழ்நாள்படா நன்றாற்றின் அஃதொருவன்

வாழ்நாள் வழியடைக்குங் கால்" (Gowmarishwari, 2002)

எனும் திருக்குறளுடனும்,

"தோற்றம் அரிதாய மக்கட்பிறப்பினால்

ஆற்றுந்துணையும் அறஞ்செய்க - மாற்றின்றி

அஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து

துஞ்ச வருமே துயக்கு"

என்னும் பழமொழி நானூறுடனும் ஒப்பிடுவது நோக்குவதற்குறியதாகும் (Gowmarishwari, 2009).

அறம் என்பதை ஈகை, கொடை வழங்குதல், உதவுதல் என்றும் வழங்குவர்.

## ஈகை

ஓயாது உழைத்தும், உண்ணவும், உடுக்கவும் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்துதவுவதே ஈகை எனப்படும். ஈகை என்பது அறத்தையே குறிக்கும்.

ஈகையில் சிறந்த பெரியோர் ஏனையோர் நம்மிடம் வந்து வறுமை கூறி இரப்பதற்கு முன்பாக விரைந்து அவர்க்கு உதவ வேண்டும். எவ்வளவு குறைவாக இருந்த போதிலும் தான் கவர்ந்து கொள்ளாது இருப்பதைக் கொடுப்பது ஈவோர்க்குரிய சிறந்த பண்பாகும்.

கொடுக்கும் குணமே ஒருவரை உயர்த்தும். அவர் இறந்த பின்பும் புகழ் நிலைக்கும் பொருளைச் சேர்த்து வைத்துக் கொண்டு கொடுக்காமல் வாழ்பவர்களின் வாழ்க்கை எவ்வகையிலும் சிறப்புடையதாகாது. பழுப்பதன் பொருட்டுக் கட்டி வைத்திருக்கும் மா, பலா, வாழை ஆகியவற்றின் கனிகள் மற்றவர்களுக்குப் பயன்படும். அவ்வாறே நல்லவர்கள் சேர்த்து வைக்கும் பொருள்களும் வறியவர்களுக்குப் பயன்படும். கொடுக்கும் குணம் உடையவர்கள் தங்கள் செல்வத்தை எல்லாம் வறியவர்களுக்குக் கொடுத்து வாழ்வார்கள் என்ற தனிமனித நெறியை,

"கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்

கனிகளுப கார மாகும்

சிட்டருமவ் வணந்தேடும் பொருளையெல்லாம்

மிரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார்"

எனும் தண்டலையார் சதகம் வலியுறுத்துகின்றது (Gowmarishwari, 2009).

## காலம் அறிந்து உதவி செய்தல்

ஒருவன் எவ்வகையிலாவது பிறருக்கு உதவி செய்தல் வேண்டும். ஆனால் அவ்வுதவியானது பிறருக்குப் பயனளிக்கும் காலத்தில் செய்தல் சாலச் சிறந்ததாகும். இதனை,

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மானப் பெரிது"

எனும் திருக்குறள் வலியுறுத்துகிறது (Gowmarishwari, 2002).

உலகில் நற்குணம் உடையவர்களுக்குச் செல்வம் கிடைத்தால் அது புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் பயன்படும். காலத்தினையும், அதன் பெருமையினையும் உணர்ந்து பொருள் வழங்கி அவர்களைச் சிறப்பிப்பார்கள். அதாவது, நல்லவர்கள் அடைகின்ற செல்வச் சிறப்பு அனைவருக்கும் ஏற்ற வகையில் பயன்படும் என்பதை தண்டலையார் சதகம் (பா.எ., 93 1-4) மொழிகின்றது.

## ஆதரவற்றவர்களுக்கு உதவுதல்

தன்னைச் சுற்றியுள்ள நெருங்கிய உறவினர்களுக்கும், தன்னைச் சார்ந்திருக்கின்றவர்களுக்கும், கல்வி அறிவுடையவர்களுக்கும், ஆதரவில்லாதவர்களுக்கும், அந்தணர்களுக்கும், பெரியோர்களுக்கும் உதவி செய்யாமல் மற்றவர்களுக்குச் செய்கின்ற உதவியானது நன்மையைத் தராது. அவ்வாறு செய்யும் உதவியானது பெற்றதாய் பசித்திருக்க அதனைக் கருதாது அவ்வன்னையின் பசியையும் நீக்காது தான் மட்டும் சிறப்பான உணவைக் கொண்டு வாழும் கீழ்மை உடையதாகும் என்பதை,

"சுற்றமாய் நெருங்கியுள்ளார் தனையடைந்தார்

கற்றறிந்தார் துணைவே றில்லார்

உற்றவே தியர்பெரியோர்க் குதவியன்றிப்

பிறர்க்குதவு முதவி யெல்லாம்

சொற்றநான் மறை பரவும்"

என்று படிக்காசுப்புலவர் குறிப்பிடுகின்றார் (Gowmarishwari, 2009).

## பிறருக்கு நன்மை செய்தல்

ஒருவன் வாழ்வில் நலமடைய வேண்டும் என்றால் அவன் பிறருக்கு நன்மைகள் பல செய்ய வேண்டும். ஏனெனில் மனிதர்கள் தங்களுடன் சேர்ந்த மற்ற மனிதர்களுக்கு நன்மை செய்வதிலேயே தேவர்களைப் போல விளங்குகின்றனர். வேறு எதிலும் அவ்வாறு விளங்குவதில்லை. அதனால் நினைவும் செயலும் பிறருக்கும் நலம் பயப்பதாக இருத்தல் வேண்டும் என்ற அறநெறியை,

"வன்மவினை செயல்வேண்டாம், பொய்வேண்டாம்

பிறரையொன்றும் வருத்தல் வேண்டாம்

கன்மநெறி வரல்வேண்டாம் வேண்டுவது

பலர்க்குமுப கார மாகும்

நன்மைசெய்தார் நலம்பெறுவர் தீமைசெய்தார்

தீமைபெற்று நலிவர் தாமே"

எனத் தண்டலையார் சதகம் எடுத்துரைக்கின்றது (Gowmarishwari, 2009).

## அன்னதானம் செய்தல்

அறங்களிலே தலையாய அறமெனப்படுவது பசித்து வந்த உயிர்களுக்கு உணவளித்தலாகும். உணவளித்தலின் பெருமையை,

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்று மணிமேகலை கூறுகின்றது (Chellappan, 1998).

"பாரதப் போரில் சோறு படைத்தலால் பெருங்

சோற்று உதியன் சேரலாதன் புகழ் பெற்றான்"

என்று புறநானூறும் மொழிகின்றது (Swaminathar, 1971).

"சோற்றை ஆருயிர் மருந்து என்றும், அதனை வழங்குவோரை ஆருயீர்

மருத்துவர் என்றும் சாத்தனார் புகழ்வர்"

எனவே பசிப்பிணியை அகற்றும் அறநெறியாளர்கள் சமுதாயத்தில் பெருக வேண்டும் (Chandrasekaran, 2002). உணவுக் கொடையின் சிறப்பை,

"மழைக்காலத்தில் பத்துக் கலம் நீர் கொடுப்பதை விட கோடைக்காலத்தில் ஒரு குடம் நீர் கொடுப்பதே சிறந்த ஈகையாகும். பாரி வள்ளலைப் போல ஆயிரக் கணக்கானவர்களுக்கு உணவைக் கொடையாக வழங்கும் பலனைப் பார்க்கும் போது வறுமையும் பஞ்சமும் உண்டான காலத்தில் எவ்வளவு குறைவாக கொடுத்தாலும் அதுவே உணவுக் கொடையின் பயனாகும்" என்பதை தண்டலையார் சதகம் (பா.எ.,48: 3-6) எடுத்துரைக்கின்றது.

## நன்றி மறவாமை

ஒருவர். பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது. ஒருவர் செய்த உதவியின் பயனை எண்ணி வாழ்தல் மிகவும் நல்ல செயலாகும். செய்த உதவியை மறத்தல் கூடாது என்பதை,

"நன்றி மறவேல்" என்று ஔவையாரும்,

"செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்"

என்று உலக நாதனாரும் குறிப்பிடுகின்றனர் (Gowmarishwari, 2009).

ஒருவர் செய்த உதவி சிறிய அளவாக இருந்தாலும், அதைப் பெரிதாக எண்ணி நன்றி மறவாது இருத்தல் வேண்டுமென்பதை,

"துப்பிட்ட ஆலம்விதை சிறிதெனினும்

பெரிதாகுந் தோற்றம் போலச்

செப்பிட்ட தினையளவு செய்தநன்றி

பனையளவாய்ச் சிறந்து தோன்றும்"

என்று தண்டலையார் சதகம் மொழிகின்றது (Gowmarishwari, 2009).

## இனிய சொற்களைப் பேசுதல்

பிறர் மனம் மகிழ முகம் மலர்ந்து அன்பு கலந்த சொற்களைக் கூறுதல் இன்சொற் கூறுதல் எனப்படும்.

பிறரிடம் ஒருவன் பேசும் பொழுது அழகான தாமரை மலர் போன்ற இனிமையான முகத்துடன் இனிய சொற்களைப் பேசுதல் வேண்டும். ஒருவன் இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவும் போது அவர்கள் மனம் மகிழ்ச்சியடையுமாறு இனியமொழி கூறிக் கொடுக்க வேண்டும். அது கரும்பினால் செய்யப்பட்ட பந்தலில் தேன்மழை பொழிந்தது போலாகும் என்பதைப் படிக்காசுப் புலவர்

"பொற்குடையும் பொற்றுகிலும் பொற்பணியும்

கொடுப்பதென்ன பொருளோ வென்று

நற்கமல முகமலர்ந்தே யுபசார

மிக்கவின்சொல் னடத்த னன்றே"

என்று தண்டலையர் சதகத்தில் விளக்கியுள்ளார் (Gowmarishwari, 2009).

இதனுடன்,

"ஞயம் படவுரை"

"வெட்டெனப் பேசேல்" (Gowmarishwari, 2009)

"அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து

இன்சொல னாகப் பெறின்" (Gowmarishwari, 2002)

"பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே"

"சாதல் பொருள் கொடுத்த லின்சொற் புணர்வுவத்தல்" (Kanithamethaviyaar, 2002)

என்று ஆத்திசூடி, திருக்குறள், இனியவை நாற்பது, ஏலாதி ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது நோக்கத்தக்கது (Gowmarishwari, 2009).

## நட்பு

நட்பானது பொய்யொழுக்கம், எதிர்பார்ப்பு ஆகியவை ஏதும் இல்லாமல் ஒருவரோடு ஒருவர் புரிந்து கொண்டு வாழ்தலே நட்பு என்படும். நட்பு என்பது உப்புப் போன்றது. உப்பு குறையினும் மிகினும் உணவு சுவை தராது. அதுபோலவே நட்பு மிகுந்தாலும் குறைந்தாலும் வருத்தம் தரும். எனவே பகிர்ந்து கொள்ளும்போது இன்பம் இரட்டிப்பாகிறது. பகிர்தல் நட்பில் மிகவும் அவசியமாகிறது.

## நட்பின் சிறப்பு

உலகில் செய்து கொள்வதற்கு நல்லதாக உள்ள ஒன்று நட்பு. எனவே, ஒருவன் துன்பப்படும் காலத்தில் அவன் உடனிருக்க வேண்டும். அவனை கைவிடாது காப்பாற்ற வேண்டும். அவனே உண்மை நண்பன் ஆவான் என்ற நட்பின் சிறப்பினைத் தண்டலையார் சதகத்தில் படிக்காசுப்புலவர் வலியுறுத்துகிறார் (Gowmarishwari, 2002).

## பெரியோருடன் நட்புக் கொள்ளல்

பெரியோர்களின் நட்பு நலம் தரும் என்பதனால் அழிவிற் சிறந்த பெரியோர்களைத் துணையாகக் கொண்டு அவர்களுடன் நட்பு வைத்துக் கொள்ள வேண்டும். நிலைபெற்ற பெருங்கொடைச் சிறப்பும், இனிமையான நற்குணப்பாங்கும் உடைய பிரபுக்களுடன் நட்பு மேவப் பழகிப் பலகாலும் விளங்குபவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு எல்லாப் பயன்களும் உண்டாகும். அச்சமும் இல்லை. இடையூறும் வாராது. இது யாவரும் அறியுமாறு மலைமீதில் இருப்பவரை அடிவாரத்தில் உள்ள பன்றிக்குட்டி பாய்ந்து வந்து தாக்க முற்பட்டாலும் கைகூடாதது போன்றுள்ள நிலையாகும் என்று தண்டலையார் சதகம் மொழிகின்றது (Gowmarishwari, 2002).

## அடக்கத்துடன் வாழ்தல்

அடக்கம் மனிதனைச் செம்மைப்படுத்தும் அறநெறிகளும் ஒன்று. அடக்கத்துடன் வாழ்தல் அளப்பறிய புகழையும், சிறப்பையும் நல்கும். மனிதன் தனது உறுப்புகளாகிய நா, வாய், மனம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி வாழ்தலே அடக்க நெறியாகும். அடக்கம் உடைமையால் அடையும் சிறப்பும் ஆக்கமும் பற்றி வள்ளுவர்,

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்

அதனினூஉங் இல்லை உயர்க்கு"

என்று குறிப்பிடுகிறார் (Gowmarishwari, 2002).

படிக்காசுப்புலவரும் வள்ளுவரின் மொழியைப் பொன்னே போற் போற்றி,

"சங்கையற் படித்தாலுங் கேட்டாலும்

பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்

அங்கணுல கிற்சிறியோர் தாமடங்கி

நடந்துகதி யடைய மாட்டார்"

என்று தண்டலையார் சதகம் விளக்குகின்றது (Gowmarishwari, 2009).

படித்துக் கல்வியிற் சிறந்து விளங்கினாலும், அரிய கேள்வி ஞானத்தை உடையவராக இருந்தாலும், பிறரைப் பிணித்து ஈர்க்கின்ற வகையில் மெய்ப் பொருளை உரைத்தாலும் உலகில் சிறுமதியுடையவர்கள் தாம் அடங்கி நடந்து நல்ல கதியை அடைகின்ற பேற்றினை அடையமாட்டார்கள் என்பதை இப்பாடல் தெளிவுறுத்துகின்றது.

## ஒழுக்கத்துடன் வாழ்தல்

ஒழுக்கம் எனப்படுவது வாழ வேண்டிய நெறிமுறைகளுடன் வாழ்தலாகும். ஒழுக்கம் எல்லோர்க்கும் மேன்மையைத் தரும். ஆதலால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாக எண்ணிக் காத்தல் வேண்டும். எனவே நல்ல நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும் என்பதை வள்ளுவர்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஒம்பப் படும்"

என்று கூறுகிறார் (Gowmarishwari, 2002).

மனிதன் ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் வாழக்கூடிய ஒருவரின் ஒழுக்கம் கெட்டால் அவர்க்குரிய வெற்றிச் சின்னமும், ஊதுகொம்பும், பல்லக்கும், பரிசுகளும், சிவிகையர்களும் சூழ்ந்து உலா வருவதால் பெருமை இல்லை என்று தண்டலையார் சதகம் குறிப்பிடுகின்றது (Gowmarishwari, 2009).

## ஊரோடு ஒத்து வாழ்தல்

தனிமனிதர்கள் பலருடைய தொகுப்பு சமுதாயமாகும். சமுதாயத்தில் இருந்து தனித்து நிற்க இயலாது. உலக நடைமுறையை அறிந்து அனைவருடன் சேர்ந்து நடக்கும் முறையே சிறந்த பண்பாகும். இதனை,

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்"

எனும் கலித்தொகை குறிப்பிடுகின்றது (Rasamanickam, 1958).

"தனிமரம் தோப்பாகாது" எனும் பழமொழியை நினைவில் கொண்டு தனிநெறியில் வாழாது ஊருடன் ஒத்து வாழ வேண்டும் என்ற உயர் நெறியைத் தண்டலையார் சதகம் (பா.எ.,82) தெளிவுறுத்துகின்றது.

## பொறுமையுடன் வாழ்தல்

பிறர் நமக்குத் தீமை செய்தாலும் தீமை செய்தவரிடத்தும் வெகுளாது பொறுத்தல் பொறுமை என்படும். பொறுமைக்குணம் உடைய சான்றோர்களே புகழுக்குரியர் என்பதை வள்ளுவர்,

"ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்

பொன்றுந் துணையும் புகழ்"

என்று திருக்குறளில் கூறுகிறார் (Gowmarishwari, 2002).

தனக்கு உரிமையான எல்லாப் பொருள்களையும் ஒருவர் வலிந்து எடுத்துக் கொண்டாலும் அடித்தாலும், இழிவுப்படுத்தினாலும், பொறுமை உடையவர்களே அரசாள்வார்கள். பொறுமைக் குணம் இல்லாதவர்கள் காடாளச் செல்வார்கள் என்று தண்டலையார் சதகம் (பா.எ., 17: 5-8) தெளிவுறுத்துகின்றது.

## முடிவுரை

தனிமனிதன் திருந்தினால் சமுதாயம் வளம் பெற்று உயரும் எனும் நோக்கிலேயே தண்டலையார் சதகம் தனிமனிதனுக்கு வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கின்றது. குடும்ப வாழ்விற்கு அப்பாற்பட்டு வாழ்கின்ற தனிமனிதனின் இருத்தலை முறைப்படுத்தும் நோக்கில் தண்டலையார் சதகத்தில் தனிமனித வாழ்வியல் அறங்கள் அமைந்துள்ளது. தனிமனிதனானவன் அறம் செய்தல், ஈகை அளித்தல், காலம் அறிந்து உதவி செய்தல், ஆதரவற்றவர்களுக்கு உதவுதல், பிறருக்கு நன்மை செய்தல், அன்னதானம் செய்தல், இனிய சொற்களைப் பேசுதல், நட்பின்சிறப்பு பெரியோருடன் நட்புக் கொள்ளல், நன்றி மறவாமை, அடக்கத்துடன் வாழ்தல், ஒழுக்கத்துடன் வாழ்தல், ஊரோடு ஒத்துவாழ்தல், பொறுமையுடன் வாழ்தல் உள்ளிட்ட வாழ்வியல் நெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்று தண்டலையார் சதகம் கூறுகின்றது.

## References

Chandrasekaran, R. (2002) Tamil Ilakkiyam, Valviyal Neri, Coimbatore, India.

Chellappan, S. (1998) Manimegalai, Bharathi Pathippagam, Chennai, India.

Gowmarishwari, S. (2002) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Gowmarishwari, S. (2009) Pathenen Keelkanaku, Saradha Pathippagam, Chennai, India.

Kanithamethaviyaar, (2002) Eazhathi, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Rasamanickam, M. (1958) Kalithogai, Valluvar Pannai, Chennai, India.

Swaminathar, U.V. (1971) Purananuru Mollamum Uraiyum, U.V. Sa. Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License